1970 மார்ச் 18]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. விநாயகம் : அக்ரோ-இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் தாங்களே நேரிடையாக விவசாயிகளுக்குப் பம்பு செட்டு முதலியவைகளைத் தருகிறோம், அனுமதி தாருங்கள் என்று கேட்டார்களா ? அப்படிக் கேட்டிருந்தால் அனுமதி கொடுப்பதற்கு என்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அரசாங்கத்தில் இருக்கிற அதிகாரிகளும் கூட அதில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக நேரிடையாகத் தருவதில்லை. ப்ளாக் டெவலெப்மெண்ட் அதிகாரிகள் மூலம் தான் கொடுக்கப்படுகிறது. அவர்கள் விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் பெற்று என்ன என்ன கொடுக்கப்படவேண்டும், விலை என்ன என்பது எல்லாம் பெற்று திரும்ப விவசாயிகளுக்குக் கொடுக்கிறார்கள். இதில் காலதாமதம் ஏற்படுகிறது. விரைவில் உழவர் பெருமக்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டும் என்பதற்காக நேரில் அக்ரோ-இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷனே கொடுக்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. தர்மபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் மாத்திரம் பரிட்சார்த்தமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது நல்ல முறையில் செயல்படுகிறது என்றால் இதைப் பற்றி போர்ட் ஆப் டைரெக்டர்ஸ் ஒரு முடிவு எடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

அடுத்து விதி 41-ன் கீழ் திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்கள் ஓர் அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

2. கவன ஈர்ப்பு

(அ) தமிழ்நாட்டை சேர்ந்த சில இடங்களை ஆந்திர மாநிலத்தோடு சேர்க்க ஆந்திர மாநில அரசு கமிஷன் நியமிப்பதாகச் சொல்லப்படுவது குறித்து முற்பகல் 10-00

திரு. ஏ. அ. சுப்பராஜா : சட்டப்பேரவை விதி 41-ன்கீழ் ஆந்திர சட்டசபையில் தனது மாநில எல்லை ஓரங்களில் ஒட்டியுள்ள அண்டை மாநிலப் பிரதேசங்களைச் சேர்த்துக்கொள்ளுவதுபற்றி நடவடிக்கையெடுக்க ஒரு கமிஷனை நியமித்ததோடு மட்டுமல்லாமல் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஹோசூர், கிருஷ்ணகிரி, வெப்பனபள்ளி ஆகிய இடங்களில் தெலுங்கு பேசுபவர்கள் பெரும்பான்மை என்பதைச் சுட்டிக்காட்டி அவைகளை ஆந்திர மாநிலத்தோடு சேர்க்கவேண்டுமென்று உரிமையை நிலைநாட்டுகின்ற நேரத்தில் நமது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கையைப்பற்றிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலச் சட்டப் பேரவையால்—அண்டை மாநிலப் பிரதேசங்களை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதற்காக—கமிஷன் எதுவும் நியமிக்கப்பட்டிருப்பதாக இந்த அரசுக்குத் தெரியவரவில்லை. 1959-ம் ஆண்டு ஆந்திர மாநிலம்—தமிழ்நாடு (எல்லை மாற்றச்) சட்டத்தினையொட்டி இம்மாநிலத்திற்கும், ஆந்திர

மாநிலத்திற்கும் இடையேயிருந்த எல்லைத் தகராறுகள் அனைத்தும் ஏற்கனவே தீர்க்கப்பட்டுவிட்டன. இம்மாநிலத்திற்கும், ஆந்திர மாநிலத்திற்கும் தற்போது எல்லைத் தகராறு ஏதுவும் இல்லை. இதுகுறித்து மற்ற மாநிலங்களிலிருந்தோ—இந்திய அரசிடமிருந்தோ அதிகாரப் பூர்வமாகக் கடிதம் வரப்பெற்றாலன்றி அதிகாரப் பூர்வமாக இவ்வரசு எந்தச் செய்தியையும் கருத்தில் எடுத்துக் கொள்ள இயலாது.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, பத்திரிகைகளிலே அந்த மாதிரி ஒரு கமிஷனை நியமித்து இருப்பதாகவும் அதுசம்பந்தமாக ஆந்திர முதலமைச்சர் அவர்களே அதைப் பரிசீலித்து என்ன செய்யவேண்டுமென்று உறுதி கொடுத்திருப்பதாகவும் தெரிவித்தார்கள். அவர்கள் கேட்கக்கூடிய இடங்களின் எல்லையோரங்களில் பதட்ட நிலைமை இருப்பதை உத்தேசித்து ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களை அதற்கு முன்பு சம்பிரதாயமுறைப்படி ஏதாவது கேட்டு இருக்கிறார்களா? ஏதாவது அப்படி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : என்னுடைய முதல் விளக்கத்திலே நான் கொடுத்திருக்கிறேன். அது சம்பந்தமாக அதிகாரப் பூர்வமாகவோ சம்பிரதாயப் பூர்வமாகவோ மாநில அரசிடமிருந்தோ மத்திய அரசிடமிருந்தோ எந்தத் தகவலும் வரவில்லை.

(ஆ) அம்மூர் புதிய பேரூராட்சிக்கு நிர்வாக அதிகாரி நியமிக்கப் படாததால் ஏற்பட்டுள்ள நிலைமைகுறித்து.

திரு. எம். அப்துல் கபூர் சாகிப் : தலைவர் அவர்களே, சமீபத்தில் ஆறு மாத காலமாகப் புதிய பேரூராட்சி மன்றங்களில் நிர்வாக அதிகாரியை நியமிக்காமல் இருப்பதுகுறித்தும், குறிப்பாக அம்மூர் (வாலாஜா வட்டம்) புதிய பேரூராட்சிக்கு நிர்வாக அதிகாரி நியமிக்காததால் சிப்பந்திகளுக்கு ஐந்து மாதச் சம்பளம் கிடைக்காமலும், பொதுச் சுகாதாரம் பாதித்திருப்பதும் குறித்த அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: 1—10—1969-லிருந்து 43 கிராமப் பஞ்சாயத்துக்களை பேரூராட்சிகளாக மறுவகைப்படுத்தி அரசாணை எண் 1658 ஊ.வ.உ.ஆ. நாள் 3—2—1969-இல் ஆணை பிறப்பிக்கப்பெற்றது. இந்த 43 பேரூராட்சிகளில் திருச்சி மாவட்டத்திலுள்ள கோலக்குடி பேரூராட்சியைப் பொறுத்தமட்டில் ஆணை ரத்து செய்யப்பட்டது. ஆதலின் 1—10—1969-லிருந்து 42 பேரூராட்சிகள் இடம் பெறலாயின.

தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம் (1958) பிரிவு 40-ன் கீழ், ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ஒரு நிர்வாக அதிகாரியை நியமிக்க வேண்டுமென்பது விதியாகும். பேரூராட்சி அதிகாரிகளை நியமிப்பதற்கென வழங்கப்பெற்றுள்ள விசேஷ விதிகளின் 4 ஆம் பிரிவின்படி, பேரூராட்சிகளில் நிர்வாக அதிகாரிகளை நியமிக்க வேண்டிய பொறுப்பு அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்களுடையதாகும். ஆதலில் இந்த 42 பேரூராட்சிகளிலும் நிர்வாக அதிகாரிகளை நியமிப்பது பற்றி மாவட்ட ஆட்சியாளர்கள் தக்க நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். கிராம வளர்ச்சி நெறியாளரிடம் கிடைக்கப்பெற்றிருக்கும் அறிக்கைகளிலிருந்து,